விகாரி ஹு ஆடி மீ
ஜூலை - ஆகஸ்ட் 2019

மலர்: 2
இதழ்: 4

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

தேஶிக ஸந்தேஶம்

MONTHLY NEWSLETTER FROM:
SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com

விகாரி ஆடி மீ
ஜூலை - ஆகஸ்ட் 2019

மலர்: 2
இதழ்: 4

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

தேஶிக ஸந்தேஶம்

திருக்கோவில் பூஜா காலங்கள் *

காலை

ஞாயிறு முதல் புதன் வரை

6.30 - விச்வரூபம்
8.30 - திருவாராதனம்
9.45 - சாற்றுமுறை

வியாழன் முதல் சனி வரை

6.00 - விச்வரூபம்
7.30 - பொது தரிசனம்

12.00 - உச்சிகாலம்

மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

தர்மகர்த்தாக்கள்:

1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

Editorial Board :
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: Sri Sudhakar Thirumalai
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: yeSKay,

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com

ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்^{3}ரி ஸமம் ஸ்தா^{2}நம் ப்^{3}ரஹ்மாண்டே^{3} நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே^{3}வோ ந பூ^{4}தோ ந ப^{4}விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

முன் காலத்தில் ஆடி மாதத்தை சூன்யமாதம் என்பர். பொதுவாக சுப கார்யங்கள் செய்வதற்கு/ தொடங்குவதற்கு இம்மாதத்தை தவிர்ப்பார்கள். ஆனால் தற்காலத்தில் இந்த நம்பிக்கையில் பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் 'ஆடித் தள்ளுபடி / சலுகை' என்ற விளம்பரத்தால் உந்தப்பட்டு, மக்கள் பொருள்கள் வாங்குவதற்கு ஆடி மாத வருகைக்காகவே காத்திருக்கிறார்கள் போலும்! ஒரு விதத்தில் இதை ஒப்புக்கொள்ளலாம் போலிருக்கிறது. எப்படியெனில்:

திருக்கோயில்களில் ஆடி மாதத்தில் சிறப்பான உத்ஸவங்கள் நிகழ்கின்றன – கஜேந்த்ர மோக்ஷம் (ஆடி கருடன்) என்ன / ஆண்டாள் அவதாரமான திருவாடிப் பூரம் என்ன / ஜ்யேஷ்டாபிஷேகம் என்ன... இப்படி மாதத்தையே புனிதப்படுத்தும் விழாக்கள் நிறைந்த மாதமாக அமையவிருக்கிறது. இதற்குத் தொடக்கமாக நமது 'தேசிக ஸந்தேச'த்தின் இம்மாத ஸஞ்சிகை பல சிறப்பான கட்டுரைகளுடனும், புகைப்படங்களுடனும் உங்கள் அனுபவத்திற்காக இதோ வெளிவருகிறது.

இந்த ஸஞ்சிகையில் நாம் அநுபவிக்கவிருப்பது:

❖ **ஆனி மாதத்திய கீழ்க்கண்ட உத்ஸவங்களின் புகைப்படங்கள்:**

- ✓ கோடை உத்ஸவம்;
- ✓ ஆனி கருடன் (பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்)
- ✓ ஸ்ரீமந்நாதமுனிகள் திருநக்ஷத்ரம்
- ✓ ஸுதர்சன ஹோமம்
- ✓ வெள்ளிக்கிழமை தாயார் உத்ஸவம்

இவைகளுடன் மூன்று வ்யாஸங்கள்.

வழக்கமான ஆடி மாத உத்ஸவப் பட்டியல், பஞ்சாங்கம். சிறுவர் பகுதி இவைகளும் இடம் பெறுகின்றன.

கண்டு வாசித்து இன்புறுமின்!

ஸ்ரீ:

விகாரி வருட ஆடி மாத பஞ்சாங்கம்						
ஆங்கில தேதி	தமிழ் தேதி	திதி	வாரம்	நக்ஷத்ரம்	உத்ஸவம்	
ஜூலை / ஆகஸ்ட்	ஆடி					
17.07.19	1	ப்ரதமை	புதன்	உத்தராடம்	தக்ஷிணாயன புண்யகாலம் - காலை - பெருமாள், தாயார் மூலவர், தேசிகன் உத்ஸவர் திருமஞ்சனம் - மாலை பொழுதுடன் ஆராதனம் - பெருமாள் வீதி புறப்பாடு	ஸ்ரீ S. ராமஸ்வாமி - ஸ்ரீ S. பார்த்தஸாரதி
18.07.19	2	த்விதீயை	வியாழன்	திருவோணம்	பெருமாள், தேசிகன் திருமஞ் சனம், மாலை வீதிபுறப்பாடு	ஸ்ரீ N. சேஷாத்ரி
19.07.19	3	திருதீயை	வெள்ளி	அவிட்டம்	காலை - தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் - மாலை தாயார் கருட வாஹனத்தில் உள் புறப்பாடு	ஸ்ரீ K. ரவி
20.07.19	4	சதுர்த்தி	சனி	சதயம்(60.00)	திருமால்வடை	
21.07.19	5	பஞ்சமி	ஞாயிறு	சதயம் (2.20/6.56 AM) / பூரட்டாதி	காலை - பேயாழ்வார் திருமஞ்சனம் - மாலை - பேயாழ்வார் வீதி புறப்பாடு	ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன்
22.07.19	6	ஷஷ்டி	திங்கள்	பூரட்டாதி (6.35/9.26Am/ உத்தரட்டாதி	திருமால்வடை	
23.07.19	7	ஷஷ்டி (19.54) / ஸப்தமி	செவ்வாய்	உத்தரட்டாதி	திருமால்வடை	
24.07.19	8	ஸப்தமி (3.16PM)	புதன்	ரேவதி	திருமால்வடை	
25.07.19	9	அஷ்டமி	வியாழன்	அச்வினி	திருவாடிப்பூர உத்ஸவம் 1 ம் நாள் - காலை ஆண்டாள் திருமஞ்சனம் - மாலை ஆஸ்தானம்	ஸ்ரீ L.V. நரசிம்மன்
26.07.19	10	நவமி	வெள்ளி	பரணி	திருவாடிப்பூர உத்ஸவம் 2ம் நாள் - காலை தாயார், ஆண்டாள் திருமஞ்சனம் - மாலை தாயார் உள்புறப்பாடு, ஆண்டாள் ஆஸ்தானம்	ஆண்டாள் உத்ஸவம் - உபயம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன். தாயார் உத்ஸவம் - உபயம் ஸ்ரீ T.R. தேவநாதாசார்யர்
27.07.19	11	தசமி	சனி	கார்த்திகை	திருவாடிப்பூர உத்ஸவம் - 3ம் நாள் - காலை ஆண்டாள் திருமஞ்சனம் - மாலை ஆஸ்தானம்	ஸ்ரீ V. சேஷாத்ரி

28.07.19	12	ஏகாதசி	ஞாயிறு	ரோஹிணி	திருவாடிப்பூர உத்ஸவம் - 4ம் நாள் - காலை பெருமாள், ஆண்டாள் திருமஞ்சனம் - மாலை - பெருமாள் வீதி புறப்பாடு, ஆண்டாள் ஆஸ்தானம்	ஆண்டாள் உத்ஸவம் - உபயம் ஸ்ரீ P.R. ஸ்ரீநிவாஸன். ஏகாதசி உத்ஸவம் - உபயம் ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்
29.07.19	13	த்வாதசி	திங்கள்	ம்ருகசிரீஷம்	திருவாடிப்பூர உத்ஸவம் - 5ம் நாள் - காலை ஆண்டாள் திருமஞ்சனம் - மாலை ஆஸ்தானம்	ஸ்ரீ C.R. இராகவன்
30.07.19	14	த்ரயோதசி	செவ்வாய்	திருவாதிரை	திருவாடிப்பூர உத்ஸவம் 6ம் நாள் - காலை ஆண்டாள் திருமஞ்சனம் - மாலை ஆஸ்தானம்	ஸ்ரீ V.C. ஸ்ரீபதி
31.07.19	15	சதுர்தசி/ அமாவாசை	புதன்	புனர்வஸு	திருவாடிப்பூர உத்ஸவம் - 7ம் நாள் - காலை ஆண்டாள் திருமஞ்சனம் - மாலை ஆஸ்தானம்	ஸ்ரீ T.R. தேவநாதாசார்யர்
01.08.19	16	அமாவாசை (9.17AM)	வியாழன்	புஷ்யம்	திருவாடிப்பூர உத்ஸவம் - 8ம் நாள் - காலை பெருமாள் உத்ஸவர், ஆண்டாள் உத்ஸவர் திருமஞ் சனம் - மாலை பெருமாள் வீதி புறப்பாடு, ஆண்டாள் ஆஸ்தானம்	அமாவசை - ஸ்ரீ கோவிந்தன். ஆண்டாள் - ஸ்ரீ வேங்கட நரசிம்ஹன்
02.08.19	17	பிரதமை/ த்விதீயை	வெள்ளி	ஆயில்யம் (15.00/ 12.00PM) /மகம்	திருவாடிப்பூர உத்ஸவம் - 9ம் நாள் - காலை தாயார், ஆண்டாள் திருமஞ்சனம் - மாலை தாயார் தங்க கேடயத்தில் உள்புறப்பாடு. ஆண்டாள் ஆஸ்தானம்	தாயார் - ஸ்ரீ S. சுந்தரம். ஆண்டாள் - ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்
03.08.19	18	திருதீயை	சனி	பூரம்	திருவாடிப்பூர உத்ஸவம் - காலை பெருமாள், ஆண்டாள் உத்ஸவர் திருமஞ்சனம் - மாலை - பெருமாள், ஆண்டாள் வீதி புறப்பாடு, இரவு திருக்கல்யாண உத்ஸவம், சேர்த்தி சேவை	ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி
04.08.19	19	சதுர்த்தி	ஞாயிறு	பூரம் (6.50/ 8.44AM) /உத்திரம்	ஊர்கோல உத்ஸவம் - மாலை - பொழுதுடன் ஆராதனம், பெருமாள், ஆண்டாள் வீதி புறப்பாடு	ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்
05.08.19	20	பஞ்சமி	திங்கள்	உத்தரம் (2.50/ 7.08AM)/ ஹஸ்தம்	ஜ்யேஷ்டாபிஷேகம் - பெருமாள், தாயார், மூலவர், உத்ஸவர் - 81 கலச திருமஞ் சனம் - கருட பஞ்சமி - கருடன் திருமஞ்சனம்	ஸ்ரீ R. கோபாலஸ்வாமி ஐயங்கார் பண்டு - ஸ்ரீ ஆனந்த் ரங்காச்சாரி

06.08.19	21	ஷஷ்டி	செவ்வாய்	சித்திரை	மதுரகவிகள்	
07.08.19	22	ஸப்தமி	புதன்	ஸ்வாதி	பெரியாழ்வார்	
08.08.19	23	அஷ்டமி	வியாழன்	விசாகம்	நம்மாழ்வார்	
09.08.19	24	நவமி	வெள்ளி	அனுஷம்	ஸ்ரீமந்நாதமுனிகள்	
10.08.19	25	தசமி	சனி	கேட்டை	தொண்டரடிபொடிகள்	
11.08.19	26	ஏகாதசி	ஞாயிறு	மூலம்	திருமால்வடை	
12.08.19	27	த்வாதசி	திங்கள்	பூராடம்	சேனைநாதன்	
13.08.19	28	த்ரயோதசி	செவ்வாய்	உத்தராடம் (60.00)	ஆளவந்தார் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், ஆளவந்தார் திருமஞ்சனம். மாலை வீதிபுறப்பாடு	ஸ்ரீ R. பத்ரிநாராயணன்
14.08.19	29	சதுர்தசி	புதன்	உத்தராடம் (02.19) / திருவோணம்		
15.08.19	30	பௌர்ணமி	வியாழன்	திருவோணம் (7.47 /9.47AM)	கஜேந்த்ரமோக்ஷம். தேசிகன்திருமஞ்சனம். மாலை பெருமாள் கருடவாஹனம், தேசிகன் வீதிபுறப்பாடு	ஸ்ரீ MKR குடும்பத்தினர் ஸ்ரீ ரமேஷ்
16.08.19	31	பிரதமை	வெள்ளி	அவிட்டம்	பூதத்தாழ்வார்	
17.08.19	32	த்விதீயை	சனி	சதயம்	பேயாழ்வார்	

ஆடியில் முக்கிய உத்ஸவங்கள்

ச்ரவணம்
ஜூலை 18 (வியாழன்)

திருவாடிப்பூர உத்ஸவம் (11 நாட்கள்)
ஜூலை 25 (வியாழன்) முதல் ஆகஸ்ட் 4 (ஞாயிறு) வரை
- ஆகஸ்ட் 3 (சனி) - **திருக்கல்யாண உத்ஸவம்**
- ஆகஸ்ட் 4 (ஞாயிறு) - **ஊர்கோல உத்ஸவம்**

ஜ்யேஷ்டாபிஷேகம்
ஆகஸ்ட் 5 (திங்கள்)

ஸ்ரீஆளவந்தார் திருநக்ஷத்ரம்
ஆகஸ்ட் 13 (செவ்வாய்)

கஜேந்த்ர மோக்ஷம் - ஆடி கருடன், ச்ரவணம்
ஆகஸ்ட் 15 (வியாழன்)

ஸ்ரீ:

ஸ்ரீ கோதா ஸ்துதி

ஸ்ரீ உ.வே. திருவயிந்தை திருவாழி க்ருஷ்ணதேசிகாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

நம் ஸ்வாமி தேசிகன் கோதா பிராட்டியைப் பற்றி அநுபவித்து அருளிச்செய்த ஸ்தோத்ரம் 'கோதாஸ்துதி' ஆகும். அதில் இம்மாதம் நாம் ஒரு சில ச்லோகங்களை யதாசக்தி, யதாமதி அநுபவிப்போம்.

3. த்வப்ரேய ஸ: ச்ரவணயோ:...

இந்த ச்லோகத்தில் ஸ்வாமி கோதா பிராட்டியைப் பற்றித் துதி பாடுவதற்கு அவளிடமே நல்வார்த்தைகள் தன் நாவில் அநுக்ரஹிக்க ப்ரார்த்திக்கிறார். 'என்னைப் பற்றித் துதிக்க நானே அநுக்ரஹம் செய்யவேணுடுமோ?' என்றால், அடியேனின் வார்த்தைகள் உன் ரத்தினச்சிலம்பின் ஒலியொத்து, உன் பர்த்தாவான திருவரங்கனின் திருக்காதுகளுக்கு அமுதம் போன்று இருந்து, அவன் திருவுள்ளம் உகந்து ப்ரஸன்னனாவான். புஷ்பம் போன்று பரிமளத்தை உடைய வாக்கை யாசிக்கிறேன். உலகில் எல்லாக் கவிகளும் அவரிடம் தான் தங்கள் காவ்யங்களை அரங்கேற்றிப் பரிசு பெறவேண்டும். அவரிடம் பரிசு பெற்றால்தான் உலகம் அவர்களை கவி என்று பஹுமானிக்கும். அதனால் நம்பெருமாளுக்கு வாக்கு மாலை ஸமர்ப்பிக்க உன்னிடம் தானே யாசிக்கவேணும். அதனால் நீயே நல் வாக்கை அடியேனுக்கு தயை கூர்ந்து அநுக்ரஹம் செய்யம்மா! என்று யாசிக்கிறார்.

ஸ்வாமி தானே திருவேங்கடமுடையான் அவதார மானாலும், ஸகல சாஸ்த்ர பண்டிதரானாலும், விபவாதாரத்தில் ஒரு விஷயம் தொடங்கும் முன் பிராட்டியின் அநுக்ரஹம் தேவை என்பதை உணர்த்துகிறார் **'இன்னமுதத்திருமகள் என்று இவரை முன்னிட்டு'** என்றபடி.

11. திக்தக்ஷிணாபி பரிபக்த்ரிம புண்ய லப்யாத்...

அம்மா நீ அவதரித்தது தென் திசையாயினும் பயனைப்பெறத் தகுதியான அநேக ஜன்மாக்களில் செய்யப்பட்ட புண்ய கர்மாக்களால் அடையத்தகுந்த உன்னுடைய பிறப்பினால் எத்திசையும் மேன்மை உடையதாக ஆகிற்று. யோக நித்ரை கொள்ளும் திருவரங்கன் தன் காதலி இருக்குமிடமான ஸ்ரீ வில்லிபுத்தூர் (தென் திசை) நோக்கிக் கடைக்கண் செலுத்துகிறான். அத்திசையும் உத்தர திசையாயிற்று.

ராமாவதார காலத்தில் **மன்னுடைய விபீடணர்க்கா மதில் இலங்கை திசை நோக்கி மலர்க் கண் வைத்தான்** திருவரங்கன். இது விபீஷணன் ராமனின் மீது வைத்த மதிப்பின் காரணமாகவும், பக்திப் பரீவாஹத்தின் பொருட்டு, பெருமாள் அவ்வாறு அவனுக்கு அநுக்ரஹித்தான். அப்பொழுதே, தென் திசை ஏற்றம் பெற்றுவிட்டது.

'உத்தர' என்ற பதம் ஸ்ரேஷ்டத்தையும், வடக்கையும் சொல்லும். கிழக்கும் மேற்கும் ஒரிடத்தில் சேரும் என்பர் பெரியோர். ஆனால், தெற்கும், வடக்கும் ஒருகாலும் சேராது. நித்ய விரோதிகள். உன் அவதார மஹிமையால், தென் திசையும் வட திசையும் விரோதம் விட்டு ஒன்று சேர்ந்துவிடும்.

'தென் நாடும் வட நாடும் தொழ நின்ற திருவரங்கம்' என்றார் பெரியாழ்வார். இரண்டு திக்குக்கும் பக்ஷபாதம் இல்லாமல் மத்யஸ்தராய் திருவரங்கத்தில் யோக நித்ரை கொண்டு அவிச்சின்னமாக உன்னையே நினைத்துக் கொண்டு இருக்கிறான் திருவரங்கன்.

பெரியாழ்வாரின் திருவுள்ளம் திருவரங்கன் தென் திசை நோக்குவது விபீடணர்க்காக என்றாலும், நம் சூடிக்கொடுத்த நாச்சியார் பொருட்டே அவன் தென் திசை நோக்கிக் கண் வளர்ந்து கடாக்ஷம் செய்கிறான் என்பதே ஸ்வாமி தேசிகனின் திருவுள்ளம்.

13. நாகேசய: ஸுதநு பக்ஷிரத:...

இந்த ச்லோகத்தில், ஸர்வ லக்ஷணம் பொருந்திய தேவியே, நீவிர் அனைவரும் அஞ்சும்படியாக கொடிய விஷமுள்ள நாகசயனத்தில் பள்ளி கொண்டவனும், அற்ப ப்ராணனை உடையதும், நிலையற்றதும், ஓயாமல் பறந்து கொண்டிருப்பதுமான வேகப் பறவையின் பாகனுமானவனும், கூடி இன்பம் அநுபவிக்க முடியாத **'புருஷ: புராண:'** என்றபடி, 'ரொம்ப கிழவனுமான ஸ்ரீ ரங்கனாதனை உன் புருஷனாக வரித்துக் கொண்டாயோ!' என்று உன் உற்ற தோழிகள் சொல்லும் பரிஹாச வார்த்தைகள் உன் விருப்பத்தைத் தருகின்றன. இருப்பினும், **'சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்... புல்கும் அணையாம் திருமாற்கரவு'** என்றபடி, திருமாலை க்ஷண காலமும் பிரியாமல் கைங்கர்ய ஸ்ரீயாய் தொண்டு செய்பவராய், வாசனை, அழகு, தண்மை, உயர்வு, ஆயிரம் பணாமணிகள் இவற்றை உடைய ஆதிசேஷனில் பள்ளி கொண்டு அமலன் என்று வரிக்கப்பட்டவன், வேதாத்மாவாயும், எல்லாம் அறிபவராயும், மஹா பலசாலியாயும், அமுதம் கொணர்ந்தவராயும் உள்ள கருடாரூடரான கமலக்கண்ணனையும், ஸர்வ ஜகத்துக்கும் காரணனாயும், கல்யாண குண நிதியாயும் உள்ள பரம புருஷனை, உன் பர்த்தாவாக வரித்தது உன்னுடைய குணநலங்களுக்கு சாலப்பொருந்தும் என்று அருளிச்செய்கிறார்.

19. துங்கைரக்ருத்ரிம கிர: ஸ்வயமுக்தமாங்கை:...

அபௌருஷேயமான (ஒருவராலும் செய்யப்படாமல் தாமாகவே நித்யமான) ச்ருதிகள் (வேதங்கள்) தங்களின் உன்னதமான சிரசுக்களால் எவனை **'ஸர்வ கந்தன்'** என்று தாங்கி வணங்குகின்றனவோ ((மாலைகள் இடுகின்றனவோ), அவனும் (அந்த பரம புருஷனும்) உன்னுடைய சுருட்டைக் குழல்களால் மணமேற்றிய மாலைகளால் ஒரு புதிய அதி விலக்ஷணமான வாசனையைப் பெறுகிறான்.

பெருமாளை **'ஸர்வ கந்த:, ஸர்வ ரஸ:'** என்று சாண்டில்ய உபநிஷத் அர்ச்சிக்கிறது. சாண்டில்ய மஹரிஷி பக்தி ஸூத்ரங்கள் இயற்றி பாஞ்சராத்திரத்தில் அர்ச்சைப் பெருமாளின் மஹிமையை விஸ்தரிக்கின்றார். **'ஸாதரம் ஸர்வ கந்த:'** என்பதை அந்த உபநிஷத் வாக்யம் திரும்பத் திரும்பப் பேசுகின்றது. அதனால் அவனது கந்தத்திற்கு ச்ருதிகளில் ஆதாரம் இருக்கிறது.

இப்படி இருப்பின் **கந்தம் கமழும் குழலியாகிய** ஸ்ரீ ஆண்டாள் சூடிய மாலைகளுக்கு எவ்வளவு வாசனை இருக்கும்? அதனால் தான் திருவரங்கனும், அவளது சூடிக்களைந்த மாலைளுக்கு ஆசைப் பட்டான் போலும்! முன்பு பூமாலை சூட்டியவள் பின்பு திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற பாமாலைகளையும் சூட்டி அழகு பார்த்தாள்.

24. ஆர்த்ராபராதிநி ஜநேப்யபிரக்ஷணார்த்தம்...

ஸ்ரீ ரங்கனாதனுடைய பக்கத்தில் பெரியபிராட்டியார் இல்லாவிட்டால் சரணடைந்தவர்கள் காப்பாற்றப் படமாட்டார்கள் என்கிறார். பச்சையான அபராதங்களை செய்து கை ஈரம் கூடக் காயாமல் **தமர்கள் கூட்ட வல்வினையை நாசம் செய்யும் சதிர்மூர்த்தியான** பெருமாளிடம் வந்து சரண் அடைந்த பக்தர் கூட்டங்கள் ஸம்ஸார தாபத்ரயத்திலிருந்து கரையேறும் பொருட்டு, இலக்குமியால் திருவரங்கனுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கையில், பக்தர்களின் வெறுப்பான கார்யங்களால் ஆச்ரிதர்களின் பக்கம் பெருமாள் முகம் கொடாமலும், அநுக்ரஹம் பண்ணாமலும் தன் திருமுகத்தை வாமபாகத்தில் திரும்பிக் கொண்டு

இருக்கும் போது, இடப்பக்கத்தில் வீற்றிருக்கும் நீயும் (கோதை), பிராட்டியைப் போலவே சரண் அடைந்தவர்களை பெருமாளே காக்கவேண்டும் என்று அவரிடம் ப்ரார்த்தித்துக் கொண்டு புருஷகாரம் செய்து கொண்டிருப்பதால் அவரின் திருமுக மண்டலம் நேராகத் திரும்பி ஆச்ரிதர்களை கருணையுடன் கடாக்ஷிக்கிறது. ராமாவதாரத்தில், அசோகவனத்தில் பிராட்டியைத் துன்புருத்திய ராக்ஷஸிகளை விசால திருவுள்ளத்துடன் (த்ரிஜடை செய்த ஒரு சரணாகதிக்காக) பிராட்டி அவர்களையும் மன்னித்து அபயம் அளித்தார்.

என் பக்கடத்திலிருந்து திருமுக மண்டலத்தைத் திருப்பி மறுபுறம் அபிமுகனானாலும் ஆகட்டும், எப்படியாவது ஆச்ரிதர் பக்கல் (தன் குழந்தை விஷயத்தில்) அபிமுகரானால் அதுவே போதும்; ஸபத்னியிடம் அபிமுகன் ஆனாலும் ஆகட்டும், நான் குழந்தையைக் காப்பாற்ற சிபாரிசு செய்தே தீருவேன் என்று ஸங்கல்பித்துக் கொண்டிருக்கிறாய் என்று ஸ்வாமி அருளிச்செய்கிறார்.

பிராட்டிமார்கள் எழுந்தருளியிருக்கும் பக்கம் வேறாயினும் இருவருக்குமே ஒரே பக்ஷமே அழகு. இரண்டு தாய்களுக்கும் இந்த துஷ்டைப் பயல், பற்ற பிள்ளை ஆகிறான். எனவே இவனை மன்னித்து பரமனடி சேர்ப்பது இருவருக்குமே புருஷகார பக்ஷமே. இங்கு, 'ஸ்ரீ' சப்தத்திற்கு பெரியோர்கள் தரும் ஆறு அர்த்தங்களை உற்று நோக்குவது சாலத்தகும்.

குழந்தைக்கு சிபாரிசு செய்து அவனைக்காப்பாற்ற நீ எதிர்ப் பக்கத்தில் இருந்து கொண்டு இலக்குமிக்குப் பக்கபலமாய் இருக்கிறாய். பெரிய பிராட்டியாரின் கருணைக்குக் குறையாமலோ மேற்பட்டோ உன் கருணை என்றும் சுரந்து கொண்டு இருக்கிறது.

26. ரங்கே தடித்குணவதோ ரமயைவ கோதே...

இலக்குமியாகிய மின்னல் கொடியுடன் கூடியவரும், கருத்த மேகம் போன்றவருமான திருவரங்கனுடைய க்ருபையாகிய மழையாலே உண்டாக்கப்பட்டிருக்கிற கெட்ட விஷத்தை (ஸம்ஸாரத்தை) போக்கடிப்பதில் அமுத நதியான உன்னைச் சரண் அடைந்து தங்களின் ஸம்ஸார தாபங்களை உடனே போக்கடிக்கின்றனர் ஆச்ரிதர்கள். இங்கு கோதை ஆசார்யராகிரார். ஆசார்ய ப்ராப்திக்கும் அவன் அருள் வேண்டும். கோதையே ஆசார்ய தத்வம். புருஷகார தத்வம் செய்து நம்மை ஸகல ஸம்ஸார தாபத்திலிருந்து காக்கின்றாள். அவளை நாம் தினமும் தொழுது உய்வோமாக. ✻

ஸ்ரீ:

கண்ணுக்கினியன

கோடை உத்ஸவம்

ஸ்ரீ:

கோடை உத்ஸவம்

கண்ணுக்கினியன

கோடை உத்ஸவம்

ஸ்ரீ:

கோடை உத்ஸவம்

ஸ்ரீ:

கண்ணுக்கினியன

கோடை உத்ஸவம்

ஸ்ரீ:

கோடை உத்ஸவம்

பெரியாழ்வர் திருநக்ஷத்ரம்

நாதமுனிகள் திருநக்ஷத்ரம்

ஸுதர்சன ஹோமம்

ஸ்ரீ:

ஆனியில் தோன்றிய ஞாநி

ஸ்ரீ உ. வே. நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

நம் ஸம்ப்ரதாயத்தில் எம்பெருமானுக்கு ஸமமாக, ஆழ்வார்-ஆசார்யர்களை பூஜ்யர்களாகக் கொண்டாடுகிறோம். 'யஸ்ய தேவே பரா பக்தி: யதா தேவே ததா குரௌ' என்பது இதற்குப் ப்ரமாணம். காரணம், 'கலியிருளே மிடைதரு காலத்து, இராமநுசன் மிக்க நான்மறையின் சுடரொளியால் அவ்விருளைத் துரந்திலனேல், உயிரையுடையவன் நாரணன் என்றறிவாரில்லை' என்றபடி எம்பெருமானே நமக்கு உயிர் எனக் காட்டிக்கொடுத்த பேரருளாளர்கள் அவர்கள்.

அவர்களைப் பூஜிக்கும் முறையை 'போற்றி யுகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்குபுகழ் சாற்றி வளர்ப்பதும்' என ஸ்வாமி தேசிகன் சுருங்க ஸாதிக்கிறார். இது நமக்கு நித்யகர்மாவாகிலும், அவர்கள் அவதரித்த நன்னாளில் விசேஷமாக பூஜிப்பது என்பதை கடைமையாக பெரியோர் கொண்டுள்ளனர்.

ஆனித் திங்களில் அவதரித்த மஹநீயர்கள் இருவர் – 'பேரணிந்த வில்லி புத்தூர் ஆனிதன்னில் பெருஞ்சோதிதனில் தோன்றும் பெருமா'னாம் பெரியாழ்வார் ஒருவர்; மற்றொருவர், 'தாளம் வழங்கித் தமிழ்மறைஇன்னிசைதந்த'வரும்/'மூளும் தவநெறி மூட்டிய'வருமான ஸ்ரீமந்நாதமுநிகள். பின்னவரின் பெருமையை சிறிது அநுபவிப்பதே, இக்கட்டுரையின் நோக்கமாம்.

நாதேந முநிநா தேந பவேயம் நாதவாந் அஹம்|
யஸ்ய நைகமிகம் தத்வம் ஹஸ்தாமலகதாம் கதம்||

என்பது இவர் விஷயமாக ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீஸூக்தி. வேதத்தின் உண்மைப்பொருள் எவர்க்கு உள்ளங்கை நெல்லிக் கனியாய் இருக்கிறதோ, அந்த ஸ்ரீமந்நாதமுநிகளாலே நான், காப்பவனை / தலைவனை உடையவனாக ஆகிறேன், என்பது இதன் பொருள். இச்ச்லோகம் ஒன்றுதானே அமையதோ அன்னாரின் பெருமை பகர.

இவர் அவதரித்த நாள்-ஊர்-திங்கள்-அடைவு திருநாமங்கள்-வாழ்வான திருமொழிகள் .... மற்றுமெல்லாம் இங்கே அநுஸந்திக்கப் ப்ராப்தம்.

அவதாரம்: த்ராவிட தேசத்தில் தெற்கே திருவீரநாராயணபுரம் என்றொரு திவ்யக்ஷேத்ரம் உண்டு. அவ்வூரில் வஸித்துவந்த சொட்டைக்

குலத்து ப்ரஸித்த வைதிகரான ஈச்வரமுநிகளுக்கு ஒரு சோபக்ருத் வருஷம் ஆனி-அநூராதா தாரையில் ஒரு குமாரர் அவதரித்தார். அவர்க்கு நாதர் எனத் திருநாமம் இட்டு, வேத-சாஸ்த்ரங்களை அத்யயநம் செய்வித்தார். பிற்காலத்தில் யோகாப்யாஸத்தில் சிறந்து விளங்கிய முனிவராகத் திகழ்ந்ததால், இவர் நாதமுநிகள் என்ற திருநாமத்தால் அழைக்கப்பட்டார். இவர்க்கு ஈச்வரபட்டர் என்ற குமாரர் உண்டு.

தீர்த்த யாத்ரை: திருமதுரை முதலிய வடதேசங்கள் சென்று எம்பெருமானை ஸேவிக்க எண்ணிய நாதமுநிகள், குடும்பத்துடன் யாத்ரை புறப்பட்டு, யமுநைத்துறைவனின் ஸேவையில் பல காலம் ஈடுபட்டுக்கிடந்து, பிறகு திருநாராயணபுரம் திரும்பி யோகத்திலும் எம்பெருமான் கைங்கர்யத்திலும் ஆழ்ந்திருந்தார்.

குடல் துவக்கு: நாதமுநிகளின் குமாரரான ஈச்வரபட்டருக்கு ஒரு ஆண் மகன் பிறந்தான்.

தேசிக மொழி

நாதேந முநிநா தேந பவேயம் நாதவாநஹம்|
யஸ்ய நைகமிகம் தத்த்வம் ஹஸ்தாமலகதாம் கதம்||

எம் தலைவன்

வேதங்களில் அடங்கியுள்ள உண்மைப்பொருள் எவருக்கு உள்ளங்கை நெல்லிக்கனியின் தன்மையை அடைந்ததோ, அந்த நாதமுனியாலே நான் தலைவரை உடையனாக ஆவேன்.

யதிராஜ ஸப்ததி

யமுனைத்துறைவனின் அநுக்ரஹத்தால் பிறந்தவன் என மகிழ்ந்து, யாமுநன் என திருநாமமிட்டார். (இவர்தான் பிற்காலத்தில் ஆளவந்தார் என ப்ரஸித்திபெற்றசார்யராவார்.)

ஆழ்வாரை ஸாக்ஷாத்கரித்து ப்ரபந்தம் அதிகரித்தல்: ஒரு ஸமயம், எம்பெருமானை ஸேவிக்கவந்த திருநகரி வைஷ்ணவர்கள் சிலர், 'ஆராவமுதே' எனத் தொடங்கும் திருவாய்மொழியை அநுஸந்திக்க, அதன் அர்த்தாநுபவத்தில் ஆழ்ந்த நாதமுநிகள், ஆயிரம் பாட்டுடையதான இப்ப்ரபந்தம் முழுவதையும் ப்ரஸாதிக்கவேணுமென அவர்களிடம் ப்ரார்த்திக்க, இந்த பத்துப் பாசுரத்தை மட்டுமே தாங்கள் திருக்குடந்தை பெரியோர்களிடம் அப்யஸித்ததாகச் சொன்னார்கள். தானும் திருக்குடந்தை சென்று பெரியோர்களிடம் விசாரித்ததும், அவர்களுக்கும் 'ஆராவமுதே' பத்து பாசுரங்கள் மட்டுமே தெரிந்திருந்தது. ஆகவே, நேராக திருநகரி சென்று பெரியோர்களைக் கேட்டதும், அவர்களும் நாங்கள் அறியோம்; அவை லுப்தமாயின என்றனர். ஆனால் பராங்குசதாஸர் என்பவர், 'ஆழ்வார் விஷயமான கண்ணினுண் சிறுத்தாம்பை அப்யஸித்து, பன்னீராயிரம் ஆவ்ருத்தி செய்தால் ஆழ்வாரை ப்ரத்யக்ஷீகரிக்கலாம்' என உபாயம் காட்டினார்.

அதன்படியே ஆவ்ருத்தி செய்ய, திவ்யதம்பதிகளின் நியமனப்படி ஆழ்வாரும் மதுரகவிகளுடன் நாதமுநிகளுடைய யோகத்தில் எழுந்தருளி, திருவாய்மொழிமுதலாக விசேஷார்த்தங்களை உபதேசித்தருளினார். இவ்வளவால் நம் ஆசார்ய ஸம்ப்ரதாயமும்; திவ்யப்ரப்பந்தங்களும் ஸ்ரீமந்நாதமுநிகளின் ஸம்பந்தத்தால் தொடர்ந்து வரும்படிக்கு எம்பெருமான் அநுக்ரஹித்தபடி.

அத்யயன உத்ஸவத்தை மீண்டும் திருவரங்கத்தில் நிலை நாட்டல்: திரு நகரிப் பெரியோர் நாதமுநிகளிடம், 'திருமங்கைமன்னன் காலத்தில் நம்பெருமாள் ஆழ்வாரை வருஷம்தோரும் ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளப்பண்ணி, திருவாய்மொழி ச்ரவணம் பண்ணி அநுபவித்தார். காலக்ரமத்தில் ப்ரபந்தம் லுப்தமாகி உத்ஸவம் இப்போது நின்றுவிட்டது. ஆழ்வார் அருள்பெற்ற தாங்கள்தான் மீண்டும் அதனைத் தொடங்கவேணும்' என விண்ணப்பம் செய்ய, எம்பெருமான் நியமனம் எனக் கருதி மீண்டும் அவ்வுத்ஸவத்தைத் தொடர்ந்து நடத்த வகைசெய்தார்.

ப்ரப்பந்தங்கள் இன்றளவும் தொடர செய்த தொண்டு: அதோடு மட்டுமின்றி, நாதமுநிகள், தான் ஆழ்வாரிடமிருந்து அதிகரித்த தமிழ் மறைக்கு இசையூட்டி தாளத்துடன் தன் மருமகன்களாகிற கீழையகத்தாழ்வான்-மேலையகத்தாழ்வான் இருவர்க்கும் உபதேசித்து, இன்றளவும் தமிழ் மறைகள் மறையாமல் நிலைக்க வழிவகுத்தார்.

அருளிசெய்த க்ரந்தங்கள்: ந்யாயதத்வம், யோக ரஹஸ்யம் என இரண்டு.

சிஷ்ய பரம்பரை: நாதமுநிகள் திருவடியை ஆச்ரயித்த முதலிகள், எண்மர். அவர்களில் ப்ரதாநமான இருவர், உய்யக்கொண்டார்-குருகைக்காவலப்பன். இவர்களில், உய்யக்கொண்டாருக்கு சரணாகதி சாஸ்த்ரத்தையும்; குருகைக் காவலப்பனுக்கு யோக சாஸ்த்ரத்தையும் உபதேசித்து, ஸம்ப்ரதாய ப்ரவர்த்தனம் செய்யும்படி நியமித்தாயிற்று.

அன்னாருடைய வாழித்திருநாமம் ஜபித்து அனைவரும் உய்வோமாக:

''சேமங்கொள் வீரநாராயணபுரத்தான் வாழியே
செல்வமுறும் ஆனிதனில் அனுடத்தான் வாழியே
தேமருவு தென்குருகூர் நகரமர்ந்தான் வாழியே
தேசமிகு சடகோபன் சரணடைந்தான் வாழியே
நாமுய்ய நாலாயிரத்தின் பொருளளித்தான் வாழியே
நன்றாகத் தாளத்தில் இசைத்துரைத்தான் வாழியே
சீர்மிகுத்த யோகமுடைச் செல்வனார் வாழியே
திருப்பொலிந்த நாதமுனி திருவடிகள் வாழியே.''

Sponsorships and donations towards publication expenses are welcome

ஸ்ரீ:

கண்ணன் கழல் தொழக் கூப்பிய கையின் பெருமை

ஸ்ரீ உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

ஆளவந்தாரின் பெருமை

நம் ஸம்ப்ரதாயத்தின் ஆசார்யர்களில் மிகவும் ப்ரசித்தி யானவர் ஆளவந்தார் என்னும் யாமுனமுனி. இவர், ஸ்ரீவைஷ்ணவ நெறியின் ஆசார்யர்களின் முதலாமவரான ஸ்ரீமந்நாதமுனிகளின் திருப்பேரனாராக ஆடி உத்தராட நக்ஷத்ரத்தில் அவதரித்தவர். மணக்கால் நம்பி எனும் ஆசார்யர், தமது வாதத்திறனால் சோழராஜ்யத்தில் ஒருபகுதியை ஆண்டு வந்த ஆளவந்தார் நாதமுனிகளின் பேரனார் என்பதால், நம் ஸம்ப்ரதாயத்தைக் காக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும் என்றெண்ணி அவருக்குத் தகுந்த உபதேசம் செய்தார். இதன் பயனாக ராஜ்யத்தை விட்டொழித்து முக்கோல் முனிவராக வடிவெடுத்தார்.

இவ்வாசார்யர் ஆகம ப்ராமாண்யம், புருஷ நிர்ணயம், ஆத்ம ஸித்தி, ஸம்வித் ஸித்தி, ஈச்வர ஸித்தி, கீதார்த்த ஸங்க்ரஹம், சதுச்லோகி மற்றும் ஸ்தோத்ர ரத்னம் ஆகிய எட்டு நூல்களை இயற்றி ஸ்ரீவைஷ்ணவ உலகுக்குப் பெருந்தொண்டாற்றினார்.

ஸ்ரீஆளவந்தர் பேரருளாப்பெருமாளிடம் தஞ்சம் புகுந்து பகவத் ராமாநுஜரே விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு நிர்வாஹகராகவேணும் என்று ப்ரார்த்தித்தார். மேலும் ஸ்ரீபாஷ்ய க்ரந்தம் பண்ணும்படி ஸ்ரீராமாநுஜரைப் பணித்து ஆட்கொண்ட உத்தமர் இவரே.

ஸ்தோத்ர ரத்னத்தின் பெருமை

பெரியமுதலியார் என்னும் ஆளவந்தார் அநுக்ரஹித்த க்ரந்தகளில் மிகவும் சீர்மை வாயந்தவை சதுச்லோகி மற்றும் ஸ்தோத்ர ரத்னம். சதுச் லோகியில் பெரியபிராட்டியாரைப் பற்றி நான்கு ச்லோகங்களால் அத்புதமாக அனைத்து சாஸ்த்ரங் களையும் உள்ளடக்கி அவளது குணநலன்களைப் பட்டியலிட்டு தம்முடைய பக்தியைப் பகர்ந்தார்

இரண்டாவதாக அமைந்த ஸ்தோத்ர ரத்னம், எம்பெருமானின் அரிய, பெரிய பெருமைகளைக் கூறவந்த நூல். நூற்பெயரே அதன் பெருமையைக் காட்டிக்கொடுக்கும். ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தில் த்வய மந்த்ரத்திற்கு 'மந்த்ர ரத்னம்' என்றும், பராசர பகவான் அருளிய ஸ்ரீவிஷ்ணு புரணாத்திற்கு 'புராண ரத்னம்' என்றும், ஆளவந்தாரின்

ஸ்தோத்ரத்திற்கு 'ஸ்தோத்ரரத்னம்' எனவும் பெயரிட்டு அநுபவித்தனர்.

இந்த ஸ்தோத்ரரத்னத்தின் ஒவ்வொரு ச்லோகமும் கேட்பவர்களை உருக வைக்கும். ஆளவந்தாரின் இந்த ஸ்ரீஸூக்தியே பிற்பாடு அவதரித்த ஆசார்யர்களின் ஸ்தோத்ரங்களுக்கு ஆதாரமாகவும் வழிகாட்டியாகவும் அமைந்தது என்று பெரியோர் பணிப்பர். நம் ஸம்ப்ரதாயத்தில் மூலமந்த்ரம், த்வயம் மற்றும் சரமச்லோகங்களின் கூட்டு எண்ணிக்கையும் ஸ்தோத்ர ரத்னத்தில் அமைந்த ச்லோகங்களும் (65) ஒத்து இருப்பதனால் அந்த மந்த்ரங்களின் ஸாராம்சமே ஸ்தோத் ரரத்னம் என்றும் அநுபவிப்பர்.

இந்த ஸ்தோத்ர ரத்னத்திற்கு, பெரியவாச்சான் பிள்ளை மணிப்ரவாளத்திலும், ஸ்வாமி தேசிகன் வடமொழியிலும் விளக்கவுரை அளித்துள்ளனர்.

அஞ்சலி வைபவத்தின் ஆதாரமான ச்லோகம்

ஸ்தோத்ர ரத்னத்தில் ஆளவந்தார் முதலில் தம்முடைய பாட்டனாரான ஸ்ரீமந்நாதமுனிகளையும், பராசர முனிவரையும் நம் குலபதியான மாறனையும் துதித்து, பின்பு எம்பெருமானிடம் ஈடுபடுகிறார். இதில் இருபத்து எட்டாவது ச்லோகத்தில் எம்பெருமானைக் குறித்து கைகூப்புச்செய்கையும் அதனால் உண்டாகும் பேறுகளையும் அத்புதமாக அருளிச்செய்கிறார்.

த்வதங்க்ரிமுத்திச்ய கதாகுபி கேநசித்
யதா ததாவாகுபி ஸக்ருத் க்ருதோகுஞ்ஜலி: |
ததைவ முஷ்ணாதி அசுபாநி அசேஷத:
சுபாநி புஷ்ணாதி, ந ஜாது ஹீயதே ||

இதன் திரண்டபொருள்: எம்பெருமானே! தேவரீருடைய திருவடிகளை நோக்கி எப்போதாவது எந்த அதிகாரியாவது எந்த நேரத்திலாவது எப்படியாவது ஒருமுறை செய்யப்பட்ட கைகூப்புதலானது, அப்பொழுதே பாபங்களை மிகுதியின்றிப் போக்குகின்றது; நன்மைகளை வளரச்செய்கிறது. இவ்வளவு செய்தும் இந்த அஞ்சலி ஒருபொழுதும் குறைந்து வீணாவதில்லை.

இதில் கூறப்பட்ட கைகூப்புதலான அஞ்சலியின் அருமை பெருமைகளை ஆசார்ய வள்ளலான ஸ்வாமி தேசிகன் ஒரு ரஹஸ்யநூலாக அருளிச்செய்து ஆளவந்தாரிடம் தமக்குள்ள பக்தியை வெளியிடுகிறார். இந்த ச்லோகத்தில் சில விசேஷ அம்சங்களை சிறிது அநுபவிப்போம்.

யாரைக்குறித்து அஞ்சலி செய்வது

இதற்கு முதல் ச்லோகத்தில் எம்பெருமானின் திருவடியின் போகத்தை அநுபவித்தவன் மற்றைய போகங்களில் ஒருக்காலும் விரும்ப மாட்டான் என்று அவன் திருவடியின் மேன்மையைப் பரக்க உரைத்தார். அத்தகைய அதிகாரிகளுக்கு அந்தத் திருவடியில் செய்யும் சிறிய செயல்கூட அவன் விரும்பும் எல்லா பலன்களையும் அளிக்கும் என்கிறார் இந்த ச்லோகத்தில்.

ஆகையினால் நாம் செய்யும் அஞ்சலியாவது எம்பெருமானின் திருவடிகளிலேயே ஸமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும், மற்ற தேவதைகளின் பொருட்டு ஸமர்ப்பிப்பது வீண் என்றும் அருளுகிறார். மற்ற தெய்வங்கள் அற்ப பலன்களையே கொடுக்கவல்லவர்கள். மறுபிறவி அறுக்கும் பேரானந்தத்தை கொடுக்கவல்லவர்கள் அல்லர். மேலும் அந்த தெய்வங்களுக்கு வரங்கொடுக்கும் தன்மை எம்பெருமானாலேயே ஏற்பட்டதால், திருமாலை குறித்தே கைகூப்புதல் வேண்டும் என்றருளுகிறார். அவன் திருவடிகளே உபாயம் என்றும், அவற்றை அடைந்ததும் செய்யப்போகும் கைங்கர்யங்களும் அவன் திருவடிகளிலேயே என்றும் பொருள் கூறுகிறார்.

எப்பொழுது, யார் கைகூப்ப வேண்டும்?

இந்த அஞ்சலியை செய்வதற்க்குரிய நேரம் ஏதாவது உண்டா என்றால் அதுவொன்றும் இல்லை என்கிறார். மற்றகர்மங்களைப்போல் ஒரு குறிப்பிட்ட நக்ஷத்ரத்திலோ, திதியிலோ குறிப்பிட்ட ஆண்டிலோ அல்லது வயதிலோ செய்யவேண்டும் என்ற காலநியமம் இந்த அஞ்சலிக்கு இல்லை. பாஞ்சாலியானவள் கௌரவர்களால் துன்பப்படும் போது தான் அசுத்தியாயிருந்த காலத்திலும் கண்ணனின் கழல் தொழுதாள் என்பது அனைவரும் அறிந்ததே.

அதேபோல் கைகூப்புதல் என்கிற தர்மத்தை எவரும் செய்யலாம். வயதில் பெரியவர்கள், சிறியவர்கள், அந்தணர், அந்தியர், பெண்டிர் என விரும்பிய எவரும் கைகூப்பலாம் என்கிறார் ஸ்ரீஆளவந்தார்.

கைகூப்புதலைப் பற்றிய ஞானமும் அதனைச்செய்யும் விதமும்

இரண்டு கைகளையும் விரித்து ஒன்று சேர்த்து விரல்கள் மேல்நோக்கி இருக்கும்படி தலை மேலோ, மார்பிலோ, மூக்கின் அருகிலோ வைத்துக் கொள்வதும், கிழேவிழுந்து ஸேவிக்கும் போது கைகளை தலைக்கு மேலே விரித்துக் கூப்புவதுமே அஞ்சலி எனப்படும் என்று பாகவத புராணம் ஓது கிறது.

இப்படிப்பட்ட கைகூப்புதலை அறிவிற்சிறிய குழந்தைகளே செய்யும் பொழுது எந்தச் சிறந்த ஞானமும் தேவையில்லை என்று தெரிகிறது. அதேபோல் மனம், சொல், கை முதலானவைகளில் பிணியினால் பீடிக்கப்பட்டிருந்தாலும் கைகூப்புதல் சரியாகச் செய்யமுடியாமல் போனாலும் அஞ்சலிசெய்ய வேண்டும் என்று மனத்தினால் எண்ணுவதே எம்பெருமானை உகப்படையச் செய்யும்.

எத்தனை முறை செய்ய வேண்டும்?

இந்த அஞ்சலியை எத்தனை முறை செய்ய வேண்டும் என்பதை ''ஸக்ருத் க்ருத:'', அதாவது, ''ஒருமுறை'' என்று தெளிவிக்கிறார் ஆசார்யர். அவனிடமுள்ள ப்ரீதியினால் எத்தனை முறையேனும் அஞ்சலி செய்வதை தடுத்தபடி அன்று இது. ஒருமுறை செய்தாலே போதும் அனைத்து பலன்களும் ஸித்தியாகும் என்பது தாத்பர்யம். மேலும் இந்த அஞ்சலியானது, செய்தவுடனேயே எம்பெருமானுக்கு மகிழ்ச்சியைத் தந்து அவனது அருளைப் பெறுவிக்க வல்லது.

எம்பெருமானை குளிரவைக்கும் அஸ்த்ரம்

மந்த்ரங்களைக் கொண்டும், தந்த்ரங்களில் முத்ரையைக் கொண்டும் நாம் பகவானை வழிபடுகிறோம். இதில் அஞ்சலியாகிய முத்ரையே மிகவும் போற்றபடுவதான முத்ரை என்று பாரத்வாஜ ஸம்ஹிதை கூறுகிறது. இந்த அஞ்சலியை 'அ' எனும் எழுத்தின் உட்பெருளான பரமாத்மாவிடம் செலுத்தினால், 'இவன் நம்மைக் கையெடுத்துக் கும்பிட்டு விட்டானே, இவனுக்கு நாம் என்ன செய்யப்போகிறோம்' என்று அவனை நீர்ப்பண்டமாக உருக்குமாம். ''நம்முடைய சின்னம்

அஞ்சலி, அவனுடைய சின்னம் நமக்கு பயத்தைப் போக்கி அருளை அளிக்கும் அபய முத்திரை'' என்கிறார் ஸ்வாமி தேசிகன்.

பெரியபிராட்டியைக் குறித்து பராசர பட்டர் என்னும் ஆசார்யர், ''அம்மா! ஐச்வர்யத்திற்காகவோ, ஆத்ம அநுபவத்திற்காகவோ, மோக்ஷத்திற்காகவோ எவனொருவன் உன்னை குறித்து அஞ்சலி செய்கின்றனோ அவன் வேண்டியது அனைத்தும் அருளி இன்னமும் அவனுக்கு ஒன்றும் செய்ய வில்லையே என்று வெட்கப்படுகிறாயே! உன்னுடைய வண்மை எத்தகையது?'' என்று வியக்கிறார்.

நம்மாழ்வாரும்தாம்கைகூப்புவதேஎம்பெருமானுக்கு அணிகலனாக அமையும் என்றும் நம்பெருமானைக் கண்டு ''பாதங்கைதொழுது பணியீர் அடியேன் திறமே'' என்றும் ''எழுந்து மயங்கும் கைகூப்பும்'' என்றும் தாம் மயங்கி இருக்கும் போதும் தேறி இருக்கும் போதும் அவனைக்கண்டு கைகூப்புதலே தமது ஸ்வபாவம் என்றும் தெரிவிக்கிறார்.

சங்கேந்திய கையனைத் தொழாத கை கையே அல்ல என்று அறுதியிடுகிறார் பரகாலன்.

ஸ்வாமி தேசிகனும் நாம் செய்யும் வல்வினைகளால் நமக்குண்டான எம்பெருமானின் நிக்ரஹமாகிற அம்புக்கு, அவனைக் கைகூப்புதலே நாம் எய்தும் எதிரம்பாக ஆகும் என்று அஞ்சலியின் பெருமையைப் பேசுகிறார்.

அனைத்து அசுபங்களை அழிக்க வல்லது

இவ்வாறு செய்யும் கைகூப்புதலின் பயனைசச் லோகத்தின் பின்னிரண்டு வரிகளால் வர்ணிக் கிறார் ஆளவந்தார். எம்பெருமானைக் குறித்து அஞ்சலி செய்பவனுக்கு, அனாதியாய் ஸம்பவித்த பாபங்கள் அனைத்தும் ஒழிகின்றன. மேலும் சிற்சில பாபங்களுக்கு சிற்சில ப்ராயச்சித்தங்களே கூறப்பட்டுள்ளன. ஆனால் இந்த அஞ்சலியோ, ஸகல வினைகளையும் தீர்க்கும் நிவாரணி. அதாவது, நாம் ஒரே முறைசெய்யும் அஞ்சலியானது எம்பெருமானை அடைவதற்குத் தடையாகவுள்ள அனைத்து வினைகளையும் போக்கும் என்பது உட்பொருள்.

அனைத்து நலங்களையும் விளைவிக்கும்

அஞ்சலி நமக்கு வேண்டிய பலன்களை கொடுக்குமோ என்னில், அது பாவங்களை மட்டும் போக்காமல் நாம் வேண்டும் நன்மைகள் எதுவேண்டுமானலும் பயக்கும் என்கிறார்.

சில பக்தர்கள் எம்பெருமானிடம் ஐச்வர் யாதி பலன்களை யாசித்துப் பெறுவர். ''உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள்'' என்னும் பரமைகாந்திகள் அவனிடம் வேறொன்றையும் எதிர்பார்க்காமல் அவனிடம் சரணாகதி செய்து மோக்ஷானந்தத்தில் திளைக்க விழைவர். ஆக, எந்ததெந்த பக்தர்கள் என்ன வேண்டும் என்று எண்ணுகிறர்களோ அவர்களுக் கேற்றவாறு பயனளிக்கும் இந்த அஞ்சலி என்பது கருத்து.

அஞ்சலியை ஒருதரம் செய்தால் அத்துடன் அது நிற்காது. மேலும் அது பல அஞ்சலிகளை விளைவித்து நமக்கு நல்ல பலன்களை மேன்மேலும் அளித்து படிப்படியாக பெருமாளிடம் பக்தியை செலுத்த வைத்து மோக்ஷ உபயமான சரணாகதி செய்வித்து அதன் பலனாக எம்பெருமானுக்கு கைங்கர்யங்களை செய்யப்பண்ணும்.

அஞ்சலி நம்மை மட்டும் காக்காமல் நம்மைச் சேர்ந்த ஏழேழு தலைமுறைக்கும் பலன்களை அளித்து உதவி செய்யும்.

முடிவுரை

இவ்வளவு பெருமை வாய்ந்த கைகூப்புதல் எனும் எளிய உபாயத்தை நமக்கு அறிவித்த ஆளவந்தாருக்கும், அவரது ச்லோகத்திற்கு விளக்கவுரை எழுதிய ஸ்வாமி தேசிகனுக்கும் அந்த அஞ்சலிக்கு உரியவர்களான திவ்யதம்பதிகளுக்கும் வரும் 13.08.2019 ஆளவந்தாரின் அவதார தினத் தன்று நாம் மத்தகத்திடைக் கைகளைக் கூப்பி வணங்கி நற்பலன்கள் பெற்று உய்வோமாக!

தேசிக மொழி

விகாஹே யாமுநம் தீர்த்தம் ஸாதுப்ருந்தாவநே ஸ்த்திதம்|
நிரஸ்த ஜிஹ்மக ஸ்பர்சே யத்ர க்ருஷ்ண: க்ருதாதர:||

தூய தீர்த்தம் போன்ற ஆசார்யன்

விலக்கப்பட்ட ஸர்ப்பங்களின் (வக்ர புத்திகளின்) ஸம்பந்தத்தை உடையதான எந்த நீரில் கண்ணபிரான் ஆதரம் கொண்டவனோ, உயர்ந்த ப்ருந்தாவனத்தில் (ஸாதுக்களின் கூட்டத்தைக் காப்பதில்) நிலையுடையதான அந்த ஆளவந்தார் எனும் தூய ஆசார்யனாகிய யமுநா நதியின் தீர்த்தத்தில் ஆழ்ந்து ஈடுபட்டு நிற்கிறேன்.

யதிராஜ ஸப்ததி

ஸ்ரீ:

பாட்டீ! ஒரு கதை சொல்லேன்...

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

ஸுமதி: பாட்டீ! போனதடவை அம்மாள் தேசிகனுக்கு ப்ராசார்யரானதும், அநுக்ரஹித்தது மான சரித்ரத்தச் சொன்னேள். இதக் கேட்டதும் நேக்கு பழமொழி ஒண்ணு ஞாபகத்துக்கு வந்தது – 'விளையும் பயிர் முளையிலே தெரியும்'னு!!

பங்கஜம் பாட்டீ: அழகாச் சொன்னே. திருவாய்மொழி வ்யாக்யாநத்திலே, இதை 'முளைக்கும்போதே வைரம் பாய்ந்து முளைக்கும் வஸ்துக்கள் போலே' என்பர். இப்படிப்பட்ட தகுதியைக் கொண்டவர்க்கு மங்களம் உண்டாகட்டும், என்கிறது இந்த ச்லோகம்.

ஸுந்தரராஜன்: பாட்டீ! தேசிகனுக்கு அம்மாள் ப்ராசார்யர் ஆனதை அடுத்த ச்லோகத்திலே குறிப்பிட்டிருக்கு-னு சொன்னேளே; அது என்ன-ன்னு சொல்றேளா.

பங்கஜம் பாட்டீ: அந்த ச்லோகம் இதோ:

ராமாநுஜார்யாத் ஆத்ரேயாத்
மாதுலாத் ஸகலா: கலா: |
அவாப விம்சத் அப்தேய:
தஸ்மை ப்ராஜ்ஞாய மங்களம் ||

இதோட அர்த்தம் – 'தனது மாமாவான ராமாநுஜாசார்யரிடமிருந்து எல்லா வித்யை களையும் தன்னுடைய இருபதாவது வயதுக்குள் கற்றுக்கொண்ட அந்த அறிவாளிக்கு மங்களம் உண்டாகுக' என்பது.

ஸுமதி: பாட்டீ! அப்புள்ளார்தானே, ஸ்வாமிக்கு மாமா. இப்போ, இங்கே யாரோ ராமாநுஜாசார்யர், அப்படீங்கறேளே! இவர் யார் பாட்டீ?

பங்கஜம் பாட்டீ: ரெண்டு பேரும் ஒருத்தரையேதான் சொல்றது;

அவருக்கு இயற்பெயர் 'ராமாநுஜன்' என்பது; பட்டப்பெயர் அப்புள்ளார்-ங்றது.

ஸுந்தரராஜன்: ஆமாம் பாட்டீ! ஸ்வாமியோட தனியன்-ல கூட 'ராமாநுஜ தயாபாத்ரம் ...'னு ஸேவிக்கிறோமே!! ஸரி பாட்டீ! அவருக்கு அப்பா-அம்மா வெச்ச பேரு 'ராமாநுஜன்', அப்படீன்னு. பின்னே ஏன் அப்புள்ளார்-னு சொல்றோம்.

பங்கஜம் பாட்டீ: அதுவா, அதுக்கு 'கிடாம்பி' வம்சத்தின் பரம்பரையை கொஞ்சம் தெரிஞ்சுக்கணும். ஸ்ரீபாஷ்ய காரருடைய ரஹஸ்யார்த்த-சிஷ்ய-பரம்பரை, ஆத்ரேய கிடாம்பி ஸ்ரீப்ரணதார்த்திஹரர் என்பவரிடமிருந்து தொடங்குகிறது. இவர் மடப்பள்ளி ஆச்சான் என அழைக்கப்படுபவர். இவருடைய குமாரருக்கு ஆசார்யரின் திருநாமம் சூட்டி, ராமாநுஜப்பிள்ளான்

என அழைப்பர். ரங்கராமாநுஜாசார்யர் என இவருடைய திருநாமம். இவர் தன்னுடைய குமாரனுக்கு ராமாநுஜன் என திருநாமம் சூட்டினார். இக்குழந்தை சிறுபிராயத்திலேயே அதிமேதாவியாய் விளங்கியதைக் கண்ட அனைவரும், 'தாத்தாவையே உரித்துவைத்திருக்கும் இவன் அப்புள்ளானோ' என அதிசயித்தனர். ஆகவே அப்புள்ளார் என்ற திருநாமமே ப்ரஸித்தமாயிற்று.

மேலும், இவர் வைநதேயர் (கருடன்) உபாஸகர். (பிற்காலத்தில் தன் மருமகனான ஸ்வாமி தேசிகனுக்கு கருடமந்த்ரத்தை உபதேசிக்க, தேசிகனும் வைநதேயனை உபாஸிக்க, அவர் அநுக்ரஹித்தஹயக்ரீவன் அருளால், தேசிகன் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரானார், என்பது மேல் சரித்ரம்). அப்புள்ளாரின் பெயருக்கு வருவோம். 'புள்' என்பது, பறவை அரசன் கருடனைக் குறிக்கும். கருட-உபாஸகர் என்பதனால் இவரை 'அப்புள்ளார்' என அழைத்திருப்பர்!!

ஸரி, நாமும் ஸ்வாமி தேசிகன் ஸாதித்த கருடதண்டகத்தை ஸேவிக்கலாமா!

(எல்லோரும் கருட தண்டகம் அழகாக ஸேவிக்கின்றனர் ''நம: பந்நகநத்தாய ..... கீதோ கருடதண்டக:'' என)

பங்கஜம் பாட்டீ: நன்னா சொல்றேள்; ரொம்ப ஸந்தோஷம். நீங்க மொதல்ல என்ன கேட்டங்கோ... அம்மாள், தேசிகனுக்கு ப்ராசார்யரானதை இந்த ச்லோகம் எப்படி குறிக்கிறது, அப்படீன்னுதானே! மாமாவான அப்புள்ளாரிடம் எல்லா வித்யைகளையும் தேசிகன் கற்றார், என்பது இந்த ச்லோகத்தின் பதங்களுக்கு பொருளாகும். அம்மாள், அப்புள்ளாரின் ஆசார்யராவார். அப்படியானால் அம்மாள், அப்புள்ளாரின் சிஷ்யரான தேசிகனுக்கு ப்ராசார்யர் ஆகிறார் அல்லவா!!

இந்த ச்லோகத்தில் இரண்டு விசேஷங்கள் சொல்லப்படுகின்றன. அநேகமாக நன்கு கற்றவர்களுக்கு, ஆசார்யர் பலர் இருப்பர். உதாரணமாக, ஸ்ரீபாஷ்யகாரருக்கு ஐந்து ஆசார்யர்கள் உண்டு என்கிறது, சரித்ரம்.

அது போலில்லாமல் தேசிகனுக்கு எல்லா வித்யைகளையும் அப்புள்ளாரே புகட்டினார், என்கிறது.

ஸுந்தரராஜன்: இதனாலே என்ன விசேஷம் சொல்லப்படறது? பாட்டீ!

பங்கஜம் பாட்டீ: அப்படிக் கேளு; இதிலேர்ந்து, அப்புள்ளார் எல்லா வித்யை களிலும் கைதேர்ந்த சிறந்த ஆசார்யர் என்பது தேர்கிறது; மேலும், பலரிடம் அலைந்து திரிந்து விஷயங்களைக் கற்றுக்கொள்ளவேண்டிய அவச்யமில்லாமல், தேசிகனுக்கு ஒரே ஆசார்யரிடம் அனைத்தையும் கற்க நேர்ந்த அத்ருஷ்ட-விசேஷமும் புலப்படுகிறது.

இத்தனையும் கற்பதற்கு அவர் எடுத்துக்கொண்ட ஸமயம் 'இருபதே வயது' என்பது மற்றொரு ஆச்சர்யம் அல்லவா!! இதனாலேயே ச்லோகத்தில் அவர் 'ப்ராஜ்ஞர்' எனக் குறிப்பிடப்படுகிறார். இச்சொல்லுக்கு 'ப்ரக்ருஷ்ட ஞானமுடையவர்' (மிகச் சிறந்த அறிவுபெற்றவர்) எனப்பொருளாம்.

இனி தொடரும் ச்லோகங்களை அடுத்த ஸந்தர்ப்பத்தில் அநுபவிப்போம்.

(தொடரும்)

With Best Compliments From:

S.P. Ramasami

Prop. Karpagavinayaga Film Circuit,

Old No. 322, New No. 58, Flat No. 2, Sathish Apartments,
Alagirisami Salai, K.K. Nagar, Chennai 600 078.

SVDD thanks Sri S.P. Ramasami & Family
for sponsoring this month's issue of Desika Sandesam